NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 29 October 2024

# $120 மில்லியன் மதிப்பிலான கரிமம் உறிஞ்சும் நுண்ணுயிர் தொடர்பான ஆய்வு முயற்சி

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகம், 120 மில்லியன் வெள்ளி மதிப்பிலான பெரிய ஆய்வு முயற்சி ஒன்றில் ஈடுபடத் திட்ட மிட்டுள்ளது.

கரிமம் உறிஞ்சும் நுண்ணுயிர் களின் ஆற்றலைப் பயன்படுத்தி சிறப்பு ரசாயன உற்பத் தியிலிருந்து நீடித்த நிலையான விமான எரிபொருள் வரை உற் பத்தித் துறையை பசுமைச் சூழல் சார்ந்த இடமாக மாற்றுவது ஆய் வின் நோக்கமாகும்.

செயற்கை உயிரியல் என்று பரவலாக அழைக்கப்படும் இது வளர்ந்து வரும் துறையாக உள் ளது. இதில் ஆராய்ச்சியாளர்கள் மரபணுவை மாற்றியமைத்து, விரும்பிய இறுதிப் பொருள்களை உற்பத்தி செய்யமுடியும்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள், கரிமம் உறிஞ்சும் நுண்ணுயிர் களை பொருளியல் ரீதியாக சாத் தியமாகக் கூடிய வழியில் உற் பத்தி செய்ய முயற்சி செய்வார் கள். இவற்றை எரிபொருளாகப் பயன்படுத்தி ரசாயனம் முதல் பல தரப்பட்ட பொருள்களைத் தயா ரிக்க முடியும் என்று என்யுஎஸ் துணைத் தலைவர் (ஆய்வு, தொழில்நுட்பம்) பேராசிரியர் லியு பின் தெரிவித்தார்.

கச்சா எண்ணெய்யை சுத்தி கரிக்கும் நடைமுறையிலும் இது மாற்றத்தை ஏற்படுத்தும் என்றார் அவர்.

ஏற்கெனவே ஜூரோங் தீவை நீடித்த ரசாயன, சுத்திகரிப்பு நிலையமாக மாற்ற திட்டமிட்டுள் ளது.

அந்த வகையில் ஆய்வு இதற்கு பேருவிதவியாக இருக் கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளியல் வளர்ச்சிக் கழ கத்தின் நிர்வாக உதவித் தலை வரான லிம் வே லென், தயாரிப் புத் துறை, அதிக நீடித்த நிலைத் தன்மைமிக்க பொருள்களைத் தயாரித்து சிங்கப்பூரின் பசுமை இலக்குக்கு பங்களிக்க செயற்கை உயிரியல் சாத்திய மான வழியாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.